## **cLkiy¥ng£ilefuh£Á**

### **31.08.2021 « njÂa rhjhuz கூ£lk‹ wãuš**

<table>
<tr><th>வ. எ ண்</th><th>நகர்மன்ற தீர்மான எண்</th><th>மன்றப்பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>1</td><td>1620</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள இராஜேந்திரா சாலை மற்றும் நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள இரண்டு கழிப்பிடங்களில் பராமரிப்பு பணியை ரூ.8,00,,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 26.02.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை : மதிப்பீட்டை விட 0.12% குறைவு<br>2. திரு.எம்.கே.சுரேஷ்குமார், உடுமலைப்பேட்டை : மதிப்பீட்டை விட 3.79% அதிகம்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>ந.க.எண் 386/2021/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>2</td><td>1621</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வரும் பைபாஸ் சாலை மற்றும் ஏரிப்பாளையம் பகுதியில் உள்ள இரண்டு கழிப்பிடங்களில் பழுது நீக்கி பராமரிப்பு பணியை ரூ.6,00,,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 26.02.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. திரு.எம்.கே.சுரேஷ்குமார், உடுமலைப்பேட்டை : மதிப்பீட்டை விட 0.15% குறைவு<br>2. திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை : மதிப்பீட்டை விட 3.33% அதிகம்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.கே.சுரேஷ்குமார்,உடுமலைப்பேட்டை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br>(ந.க.எண் 385/2021/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>3</td>
<td>1622</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியின் நூற்றாண்டு விழா (2020-21) ன் வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு 16.02.2021 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வைப்புத் தொகை CFC யில் ரசீது போடும் போது கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் பெயர் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வைப்பு தொகை பதிவேட்டிலும் தவறுதலாக பதிவாகி உள்ளதை திருத்தம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>தவறுதலாக ரசீது போடப்பட்ட ஒப்பந்ததரார்களின் பெயர்</th><th>தொகை</th><th>சரியாக ரசீது போட வேண்டிய ஒப்பந்ததரார்களின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>P.SELVARAJ. Dindigul</td><td>1,42,000/-</td><td>SMV PROJECTS CBE</td><td>1,42,000/-</td></tr>
<tr><td>2</td><td>TEMBLE INNOVATIONS PVT. Ltd, Chennai.</td><td>6,84,000/-</td><td>P.SELVARAJ Dindigul</td><td>6,84,000/-</td></tr>
<tr><td>3</td><td>K S SMART SOLUTIONS PRIVAT Ltd Chennai.</td><td>6,84,000/-</td><td>SMV PROJECTS CBE</td><td>6,84,000/-</td></tr>
<tr><td>4</td><td>P.SELVARAJ. Dindigul</td><td>3,75,000/-</td><td>SMV PROJECTS CBE</td><td>3,75,000/-</td></tr>
<tr><td>5</td><td>P.SELVARAJ. Dindigul</td><td>1,00,000/-</td><td>SMV PROJECTS CBE</td><td>1,00,000/-</td></tr>
<tr><td>6</td><td>K S SMART SOLUTIONS PRIVATE Ltd Chennai.</td><td>10,000/-</td><td>M/S. SCHNELL ENGRGY EQUIPMENT PVT, Ltd. CBE</td><td>10,000/-</td></tr>
<tr><td>7</td><td>SURYA BALA EARTH MOUERS CBE</td><td>5,91,000/-</td><td>M/S. SCHNELL ENGRGY EQUIPMENT PVT, Ltd. CBE</td><td>5,91,000/-</td></tr>
</table>
(ந.க.எண் 1987/2021/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>1623</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான கணபதி பாளையம் உரக்கிடங்கில் பொருத்தப்பட்டுள்ள 6 எண்ணிக்கை கேமராக்களின் Sim ரீசார்ஜ் 31.05.2021-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால் மீண்டும் ஜீன் 2021 முதல் மே 2022 வரை ஓராண்டிற்கு ரீசார்ஜ் செய்வதற்கும் அதற்காகும் செலவினம் மாதத்திற்கு ரூ.200 வீதம் 12 மாதங்களுக்கு (200X12=2400) ஆகும் செலவினம் ரூ.2400/-க்கும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஒப்பந்ததாரர் M/S.RSM&CO, உடுமலைப்பேட்டை மூலம் செலுத்தியதற்கும், மேற்படி தொகையினை அண்ணாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 1695/2021/இ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>1624</td>
<td>இந்நகராட்சிக்குச் சொந்தமான இராஜேந்திரா சாலையில் உள்ள ஆடடிசாலைக்கு 01.08.2021 முதல் 31.07.2024 வரையிலான 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கும் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 23.07.2021ம் நாளில் வரப்பெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் பெயர் மற்றும் விலாசம்</th><th>ஓராண்டுக்கான ஏலத்தொகை</th><th>ஓராண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.S.சுகேல் பாஷா, 3/43, சிவசக்திகாலனி, பெரியகுளம், பஞ்சாயத்து, உடுமலைப்பேட்டை</td><td>ரூ.1,19,000</td><td>ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில் லை.</td></tr>
</table></td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திருமதி.K.நித்யா,<br>க/பெ.முருகானந்தம்,<br>7/33,செல்லமுத்து வீ தி<br>உடுமலைப்பேட்டை.</td><td>ரூ.1,18,000</td><td>ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில் லை.</td></tr>
</table>
மேற்கண்ட விபரத்திற்கான ஏலத்தில் இருவர் கலந்து கொண்டதில் திரு.சுகேல் பாஷா என்பவர் ரூ.1,19,000/-க்கு அதிகபட்சமாக ஏலம் கேட்டுள்ளார் இந்த இனத்திற்கு சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ.1,02,533/- ஆகும். 3 ஆண்டுகளில் சராசரித்தொகை ரூ.97,728/- ஆகும். எனவே, திரு.சுகேல் பாஷா என்பவரின் ஏலக்கேள்வி சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ.16,467/- கூடுதலாக உள்ளதாலும் 3 ஆண்டுகளில் சராசரித்தொகையைக்காட்டிலும் ரூ.21,272/- கூடுதலாக உள்ளதால் அன்னாரின் கூடுதல் ஏலக்கேள்வி ரூ.1,19,000/- ஏற்று 01.08.2021 முதல் 31.07.2024 வரை ஓரண்டிற்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
(ந.க.எண் 8510/2017/அ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>1625</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய டவுன் r®nt th®L, டி Ãsh¡ v© 15, efusÎ v©.105/1 என்பதற்குபழைய சர்வே எண். 145, 3240 சதுரமீட்ட (34875,86 சதுரடி) பரப்பளவுள்ள இடம் உடுமலைப்பேட்டை கோ ஆரேடிவ் அர்பன் வங்கிக்கு சொந்தமானதாகும். மேற்கண்ட இடம் வருவாய் பதிவேட்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் என்ற பெயரில் உள்ளது. மேற்கண்ட இடத்தின் இந்தியன் ஆயில் கார்பரேசன் நிறுவனம் மூலம் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைத்து பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு கூட்டுறவு இணையம் லிமிடெட் நிறுவன மேலாண்மை இயக்குநரின் கடிதம் ந.க.எண். 902/2019/கப, நாள். 17.12.2020ம் தேதிய கடிதத்தில் 20 ஆண்டுகள் நீண்ட கால குத்தக்கு வழங்குவதாக அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் க.எண்.8/1079, அவினாசி ரோடு, கோவை 641018 நிறுவனம் மூலம் பெட்ரோலிய பொருட்கள் இருப்பு வைத்து விற்பனை செய்ய தடையின்மைச் சான்று வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.<br>
(ந.க.எண் 2626/2020/எப்1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>7</td>
<td>1626</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி ராமசாமி நகர் தெற்குப்பகுதியில் அமைந்துள்ள மேல்நிலைத்தொட்டி காம்பவுண்டு சுவர் மிகவும் பழுதடைந்த நிலையில் மரவேர்களினால் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே சுற்றிலும் உள்ள பழுதடைந்த காம்பவுண்டு சுவரை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக காம்பவுண்டு சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.8,00,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 26.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஓப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.03% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 1.95% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.RSM & Co, Udumalpet என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
(ந.க.எண் 2702/2020/இ2)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **8** | 1627 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 கதவு எண் 289, ராமசாமி நகரில் வசிக்கும் S.பாலகிருஷ்ணன் என்பவர் தனது இடத்தில் புதியதாக கட்டிடப்பணி நடைபெறுவதால் தனது குடிநீர் குழாய் இணைப்பு எண் 157/3410 குடிநீர் கட்டிடத்திற்கு பயன்படுத்துவதால் குடியிருப்பு முறையிலிருந்து குடியிருப்பு அல்லாத முறைக்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 1985/2021/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **9** | 1628 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 கதவு எண் 16A,சைதான் சந்தில் வசிக்கும் சம்சாத்பேகம் என்பவர் தனது இடத்தில் புதியதாக வீ டு கட்டி புதியதாக சொத்து வரி விதிப்பு செய்துள்ளார் தனது குடிநீர் குழாய் இணைப்பு எண் 157/8455, கட்டிடப்பணிக்காக குடியிருப்பு முறையிலிருந்து குடியிருப்பு அல்லாத முறைக்கு மாற்றம் செய்யப்பட்டது. தற்போது கட்டிடப்பணி முடிந்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதால் குடியிருப்பு அல்லாத முறையிலிருந்து 01.10.2021 முதல் குடியிருப்பு முறைக்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2061/2021/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **10** | 1629 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான திருமூர்த்தி நகரில் அமைந்துள்ள தலைமை குடிநீர் நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள அலுவலக கட்டிடம் மற்றும் ஊழியர்கள் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 2021-2022ம் ஆண்டிற்கு முதலாம் மற்றும் இரண்டாம் அரையாண்டிற்கான சொத்துவரியாக ரூ.4528/- தளி பேரூராட்சிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2017/2021/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **11** | 1630 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 கதவு எண் 24,24A பி,வி,கோவில் வீ தியில் வசிக்கும் திரு.சா.ஞானக்குமார் என்பவர் தனது பாதாள சாக்கடை கேட்பு எண்கள் 157/5771,157/5772 இரண்டு முறை வைப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் 157/5771-ற்க்கு ரசீது எண் 11136 நாள்: 26.10.2017- தேதியில் ரூ.5000 செலுத்தியுள்ளார். 157/5772-ற்க்கு ரசீது எண் 11137 நாள்:26.10.2017- தேதியில் ரூ.5000 செலுத்தியுள்ளார். மீண்டும் 157/5771-ற்க்கு ரசீது எண் 3146 நாள்:20.06.2018-ல் ரூ.5000 செலுத்தியுள்ளார். 157/5772-ற்க்கு ரசீது எண் 3147 நாள்:20.06.2018-ல் தேதியில் ரூ.5000 செலுத்தியுள்ளார். எனவே அதிகமாக செலுத்தியுள்ள வைப்பு தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 1192/2021/இ3) | அனுமதிக்கப் பட்டது |
| **12** | 1631 | அரசாணை (நிலை) எண் 238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (மா.ந4) துறை நாள் 01.10.1997ன்படி அரசுத்துறைகளில் பணிபுரியும் வாகன ஓட்டுநர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றி முடித்தவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கும் சலுகையினை நகராட்சிக்கு நீட்டித்து அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலகத்தின் கடிதம் ந.க.எண் 24817/2020-1/ஜே3 நாள் 08.01.2020ம் நாளிட்ட கடிதத்தில் | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
கேட்டுக்கொண்டுள்ளபடி, இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 0096/2020/சி1 நாள் 12.01.20201ன்படி இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்காணும் பணியாளர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்க பரிந்துரை செய்து பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஓட்டுநரின் பெயர்</th><th>மாசற்ற முறையில் பணிபுரிந்த காலம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.எஸ்.ரமேஷ்</td><td>20 ஆண்டுகள்</td></tr>
<tr><td>2.</td><td>திருது.பி.செல்வராஜ்</td><td>20 ஆண்டுகள்</td></tr>
</table>
சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 24817/ஜே1/2020 நாள் 03.07.2021ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் மேற்கண்ட இரண்டு ஓட்டுநர்களுக்கும், நகராட்சியின் செலவினத்தில் தங்கப்பதக்கம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அலுவலகத்தின் கடிதம் ந.க.எண் 84/2021/பி3 நாள் 28.07.2021ன்படி தங்கப்பதக்கத்திற்கான விலையை இயக்குநர், எழுதுபொருட்கள் மற்றும் அச்சுத்துறை, சென்னை அவர்களுக்கு நேரடியாக செலுத்தி ஓட்டுநருக்கான தங்கப்பதக்கம் மற்றும் பத்திரம் பெற்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>
எனவே மேற்காண் தங்கப்பதக்கம் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டமைக்‘கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
(ந.க.எண் 96/2021/சி1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>13</td>
<td>1632</td>
<td>
உடுமலைப்பேட்டை நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும், கொசுவினால் பரவும் நோய்களை பரவாமல் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும் உபயோகப்படுத்தவும் கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளது.எதிர்வரும் வடமேற்கு பருவ மழைக்காலங்களில் கொசு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கொசு ஒழிப்பு மருந்துகள் கையிருப்பில் அதிகமாக வைத்து இருத்தல் அவசியமாகின்ற காரணத்தால் கீழ்காணும் மருந்துகள் Tamil Nadu Medical Services Corporation Limited (TNMSC) அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து நேரடியாக வாங்கி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. எனவே 2021-22 ம் ஆண்டிற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் கீழ்காணும் மருந்துகள் வாங்குவதற்கு தோராய செலவினமாக ரூ.8.50/- இலட்சம் ஆகும்.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>S.no</th><th>Materials</th><th>Per Unit with GST</th><th>Quantity</th><th>Amount (including GST)</th></tr>
<tr><td>1.</td><td>Pyrethrum 2% Extract</td><td>1 Lit * 1100 (18% GST)</td><td>300 Litres</td><td>Rs.389400</td></tr>
<tr><td>2.</td><td>Temphos Emulsifiable</td><td>1 Lit *625(18% GST)</td><td>300 Litres</td><td>Rs.221250</td></tr>
<tr><td>3.</td><td>Bacillus Thuringenisis</td><td>1 Kg *1047 (12% GST)</td><td>200 Kgs</td><td>Rs.234528</td></tr>
<tr><td colspan="4">Total</td><td>Rs.845178</td></tr>
</table>
(ந.க.எண் 3028/2016/எச்2)
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **14** | 1633 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட தென்னை மரத்து வீதி தனியாருக்கு சொந்தமான r®nt th®L,C, Ãsh¡ 6. efusÎ v©. 65, 66. 67, 68 என்பதற்கு பதிலாக நகர புல எண்கள் 102, 103 104, 105 என்றும் உடுமலைப்பேட்டை க.ச.எண். 162/H என்பதற்கு பதிலாக கணக்கம்பாளையம் கிராமம் க.ச.எண். 245/A1 என்றும் தவறுதலாக பத்திரப்பதிவு செய்ததற்கு விளம்புகை பரிகாரம் கோரியும் செலவுத்தொகை கோரியும் இந்நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாகக் கொண்டு உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 69/2021ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கும் இந்நகராட்சி சார்பில் வழக்கறிஞர் திரு.ராமகிருஷ்ணன் ஆஜராவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.<br>(ந.க.எண் 789/2021/எப்1) | அனுமதிக்கப் பட்டது |
| **15** | 1634 | உடுமலைப்பேட்டை நகராட்சி திருமூர்த்திநகர் தலைமைக்குடிநீர் பணியிட நீர் உந்து நிலையத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர் திட்டத்தில் முறையே 20 கு.தி மின் உந்துகள் - 2 எண்கள் 50 கு.தி மின் உந்துகள் - 2 எண்கள், 30 KVA & 75 KVA மின்னாக்கிகள் மற்றும் மின்சாதனங்கள் இயக்கத்தில் உள்ளன. மேற்படி சாதனங்களை இயக்கியும் பராமரிப்பு செய்தும் செவ்வனே குடிநீர் விநியோகம் மேற்கொள்ள அரசு நிர்ணயபடி மூன்று சிப்ட்டுகளுக்கு (8மணி நேரத்திற்கு ஒருவர்) தேவையான மின்கம்பியாளர் / மின்பணியாளர்களை தற்காலிக முறையில் நியமித்து பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் தலைமை குடிநீர் பணியிடத்தில் பணிபுரிந்து வந்த மின்கம்பியாளர் ஓய்வு பெற்று விட்டபடியால் தற்போது தலைமை பணியிடத்தில் ஒரு நிரந்தர மின் பணியாளர் மட்டுமே பணியில் உள்ளதால் தலைமைக்குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 60 எச்.பி மின் மோட்டாரை இரவு பகல் தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளதால் தற்காலிகமாக மின் பணியாளர் ஒரு நபரை கூடுதலாக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்து கொள்ளவும், அதற்காக வருகிற நவம்பர் 2021 முதல் செப்டம்பர் 2022 வரை 11 மாத காலத்திற்கு ஆகும் செலவினம் ரூ.9,80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2202/2021/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **16** | 1635 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 கதவு எண் 16, ருத்ரவேணி லே- அவுட்டில் வசிக்கும் C.தனலட்சுமி என்பவர் காலிஇடத்திற்கு ரூ.5000/- 28.08.2010-ல் செலுத்தியுள்ளார். கட்டிட அனுமதி பெறும் போது 06.10.2010 ரூ.8000/- செலுத்தியுள்ளார். அவருடைய இல்லத்திற்கு பாதாள சாக்கடை வைப்புத் தொகையாக ரூ.13000/- (8000+5000). தற்போது இணைப்பு எண்:157/007/00377 என்ற எண்ணிற்கு பாதாள சாக்கடை வைப்புத் தொகை இரண்டு முறை செலுத்தியுள்ள ரூ.8000/- ரசீது எண்:0008593 நாள்:27.10.2020. எனவே அதிகமாக செலுத்தியுள்ள வைப்பு தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>.(ந.க.எண் 396/2021/இ3) | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| **17** | 1636 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் தற்போது சாலைப்பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், நூற்றாண்டு விழாப் பணிகள், கல்வி நிதி பள்ளிக்கூட பணிகள் மற்றும் இதர திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.<br>இப்பணிகளுக்குத் தேவையான மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுதல், அரசுக்கு புதிய திட்டக் கருத்துருக்கள் தயார் செய்து சமர்ப்பித்தல், தலத்தில் பணிகளை மேற்கொள்ளுதல், பணிகளுக்கான வேலைப்பட்டியல்கள் தயார் செய்தல் போன்ற அனைத்துப் பணிகளுக்கான உதவிப் பொறியாளருக்கு உதவியாக பணிபுரிய தொழில் நுட்பப் பணியாளர்கள் கிரேடு- I ல் 2-நபர் தேவைப்படுகின்றனர். இப்பணியாளர்களுக்கு பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் குறிப்பிட்டுள்ள படி கிரேடு - I பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.937/- என்ற தினக்கூலி அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்கும் இப்பணியை வருவாய்நிதி அல்லது நூற்றாண்டு விழா திட்ட நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 2248/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **18** | 1637 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் தற்போது சாலைப்பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், நூற்றாண்டு விழாப் பணிகள், கல்வி நிதி பள்ளிக்கூட பணிகள் மற்றும் இதர திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.<br>இப்பணிகளுக்குத் தேவையான மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுதல், அரசுக்கு புதிய திட்டக் கருத்துருக்கள் தயார் செய்து சமர்ப்பித்தல், தலத்தில் பணிகளை மேற்கொள்ளுதல், பணிகளுக்கான வேலைப்பட்டியல்கள் தயார் செய்தல் போன்ற அனைத்துப் பணிகளுக்கான உதவிப் பொறியாளருக்கு உதவியாக பணிபுரிய தொழில் நுட்பப் பணியாளர்கள் கிரேடு- II ல் 3-நபர் தேவைப்படுகின்றனர். இப்பணியாளர்களுக்கு பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் குறிப்பிட்டுள்ள படி கிரேடு - II பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.844/- என்ற தினக்கூலி அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்திற்கும் இப்பணியை வருவாய் நிதி அல்லது நூற்றாண்டு விழா திட்ட நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 2274/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **19** | 1638 | சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை மனு எண் W.P.2827/2019ன் மூலமாக இந்நகராட்சியில் இளநிலைப்பணியாளராக பணிபுரிந்த திரு.ஆர். ஜெகதீஸ்வரன் என்பவர் தனது பதவி உயர்வினை துறப்பு செய்துள்ளதால், 30 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்ததற்கான மிகச்சிறப்பு நிலையில் 3 சதவீத ஊதிய உயர்வுத்தொகை ரூ.38,343/- ஐ இரத்து செய்ததை திரும்ப வழங்கக்கோரி 1) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, திருப்பூர் 2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 3) ஆணையாளர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பில் நேரில் எதிர்வழக்காடும் பொருட்டு இந்நகராட்சியின் நிலை வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களுக்கு வக்காலத்து வழங்கப்பட்டு அவர்கள் மூலம் நீதிமன்றத்தில் இந்நகராட்சி சார்பில் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.<br>திரு.பி.ஆனந்த், அரசு வழக்கறிஞருக்கு மேற்கண்ட வழக்கினை எடுத்து நடத்துவதற்கான வழக்கு செலவுத்தொகை ரூ.15,000/-ஐ, (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழக்கு செலவுக்காக வழங்கும்படி கோரப்பட்டதன்படி இந்நகராட்சியின் நிலை வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களுக்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்படி தொகையை பட்டுவாடா செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் 2287/2019/பி3 | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| **20** | 1639 | உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள UKC நகரில் அமைந்துள்ள நகராட்சித் துவக்கப்பள்ளியில் 85 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி அப்பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக் கொண்டுள்ளார்.<br>அதற்கிணங்க மேற்படி பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை அமைக்க உத்தேசமாக ரூ.9.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டிற்கும் இப்பணியை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் :2327/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **21** | 1640 | உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள ஏரிப்பாளையம் நகராட்சி துவக்கப் பள்ளியில் 24 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தி வழங்கும் பொருட்டு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி இப்பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக் கொண்டுள்ளார்.<br>அதற்கிணங்க மேற்படி பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை அமைக்க ரூ.9.40 இலட்சத்திற்குத் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கும் இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் :2318/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **22** | 1641 | உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள எக்ஸ்டன்சன் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 93 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி இப்பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக் கொண்டுள்ளார்.<br>அதன்படி இப்பள்ளியில் அனைத்துத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கத் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.40 இலட்சத்திற்கு இப்பணியினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் :2319/2021/**இ1)** | அனுமதிக்கப் பட்டது |
| **23** | 1642 | உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள நெல்லுக்கடை வீ தி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 81 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி இப்பள்ளி தலைமை ஆசிரியை கேட்டுக் கொண்டுள்ளார்.<br>எனவே மேற்படி பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கத் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.40 இலட்சத்திற்கு இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் :2317/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **24** | 1643 | உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள கச்சேரி வீ தி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 62 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி அப்பள்ளி தலைமை ஆசிரியை கேட்டுக் கொண்டுள்ளார். | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கிணங்க மேற்படி பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை அமைப்பதற்கு ரூ.9.40 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கும் இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் :2320/2021/இ1 | |
| **25** | 1644 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.3893.71 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 27.03.2013 -ல் M/s.Subaya Construction Company Ltd. Chennai. 600 083, என்ற நிறுவனம் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்பார்வையில் மேற்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு. 30.06.2016 அன்று திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. 01.07.2016 முதல் 31.12.2016 வரை சோதனை ஓட்டம் முடிக்கப்பட்டு, ஒப்பந்தத்தின்படி 01.01.2017 முதல் 31.12.2017 வரை ஓராண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது, திட்டத்தில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை 11368, வழங்கப்பட்டுள்ள இணைப்புகளின் எண்ணிக்கை 11066. சுமார் 3 ½ ஆண்டு காலம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 18.08.2021 முதல் நகராட்சி வசம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பளிப்பின் போது குடிநீர் வடிகால் வாரியத்தால், பராமரிப்பு பணி நடைபெற்ற போது பயன்பாட்டில் உள்ள மின் சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள் பழுதுகள் ஏற்படுவது இயற்கையே எனக் கூறப்பட்டும், அவற்றினை நகராட்சி மூலம் செப்பனிட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் அவர்களின் கடிதம் எண்:1005 நாள்:10.05.2021-ல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள மின் மோட்டார்கள், இயந்திரங்கள், மின் மாற்றிகள், Air Blower, Primary clarifier, Scrubber worm wheel, Worm shaft, மற்றும் Chlorination system ஆகியவைகளை சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்ட வர இந்நகராட்சி மூலம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் ரூ.11.30 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் 7584/2002/இ2 | அனுமதிக்கப் பட்டது |
| **26** | 1645 | இந்நகராட்சிக்குச் சொந்தமான இராஜேந்திரா பாதை கடை எண் 20-ஐ, குத்தகைக்கு விட்டு உரிமம் வழங்கும் பொருட்டு, 13.08.2021ம் நாளில் திறந்த மறு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொது மறு ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்காணும் விபரத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரியவரின் பெயர் /விலாசம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக் கேள்வித் தொகை</th></tr><tr><td>1.</td><td>திரு.S.செல்வன்<br>த/பெ. சுந்திரபாண்டியன்<br>34/2 சர்தார் வீ திஉடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.14,500/-</td></tr><tr><td>2.</td><td>திருமதி.சத்தியசீலி<br>க/பெ. சுந்திரபாண்டியன்<br>32 சர்தார் வீ திஉடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.14,200/-</td></tr></table>மேற்கண்ட கடைக்கான முந்தைய குத்தகைதாரர்கள் திரு.விஜய்ஆனந்த் என்பவர்க்கு கேட்பு எண்.157/1800க்கான மாத வாடகை மதிப்பு ரூ.18,630/-ஆக | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த கடைக்கான வாடகை மதிப்பு மிக அதிகமாக இருப்பதாக தெரிவித்து இக்கடையை 08.03.2021ம் நாளில் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இதன் அருகில் உள்ள கடை எண்.19க்கு திரு.முருகேசன் என்பவர் பெயரில் கேட்பு எண்.157/1611க்கு மாத வாடகை ரூ.13,800/- உள்ளது.<br><br>
மேலும், இக்கடைக்கு தற்போது இந்த கடை கடந்த 5 மாதங்களாக பூட்டப்பட்டு நகராட்சி வசமே இருந்து வருகிறது. இதனால் நகராட்சிக்கு தொடர்ந்து நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது. தற்போது திரு.S.செல்வன் என்பவர் மாத வாடகையாக ரூ.14,500/-க்கு உயர்வான ஏலக்கேள்வி கேட்டுள்ளார். இக்கடைக்கு அருகில் உள்ள கடை எண்.19க்கு மாத வாடகையை காட்டிலும் ரூ.700/- வரை அதிகமாக வாடகை கோரப்பட்டுள்ளது<br><br>
எனவே, இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையிலும், தொடர் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும், மேற்கண்ட கடைக்கு இரண்டு ஏலக்கேள்விகள் கோரியதில் திரு.S.செல்வன் என்பவரின் உயர்வான ஏலக்கேள்வியான மாத வாடகை மதிப்பு ரூ.14,500/-ஐ ஏற்றுக்கொள்ளலாம். இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தினை கருத்தில் கொண்டு இராஜேந்திரா பாதை கடை எண் 20-ஐ திரு.S.செல்வன் என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மாத வாடகை ரூ.14,500/-க்கு (ரூபாய் பதிநான்கு ஆயிரத்து ஐநூறு மட்டும்) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
(ந.க.எண் 10039/2017 /அ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27</td>
<td>1646</td>
<td>
இந்நகராட்சிக்குச் சொந்தமான குட்டைகரை கடை எண் 2-ஐ, குத்தகைக்கு விட்டு உரிமம் வழங்கும் பொருட்டு, 13.08.2021ம் நாளில் திறந்த மறு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொது மறு ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்காணும் விபரத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரியவரின் பெயர் /விலாசம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக் கேள்வித் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு.R.காளிதாஸ்<br>26,A ராமசாமி<br>நகர்,உடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.12,100/-</td></tr>
<tr><td>2.</td><td>திரு.T.திருப்பதி<br>71 பெரியகடை<br>வீ திஉடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.11,700/-</td></tr>
</table><br>
மேற்கண்ட கடைக்கான முந்தைய குத்தகைதாரர்கள் திரு.வினோத்ராஜா என்பவர்க்கு கடை 03க்கு கேட்பு எண். 157/1715க்கான மாத வாடகை மதிப்பு ரூ.11,500/-ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த கடைக்கான வாடகை மதிப்பு மிக அதிகமாக இருப்பதாக தெரிவித்து கடையை 31.03.2019ம் நாளில் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இதன் அருகில் உள்ள கடை எண்.01க்கு திருமதி.K.அகிலாண்டீஸ்வரி என்பவர் பெயரில் கேட்பு எண்.157/1713க்கு மாத வாடகை ரூ.11,500/- உள்ளது.<br><br>
மேலும், இக்கடைக்கு கடந்த 24.04.2019 ,08.05.2019, 23.05.2019, 19.06.2019, 25.09.2019, 24.12.2020, 29.01.2021, 13.08.2021 நாளில் குத்தகைக்கு விடுவதற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இக்கடையை குத்தகை
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அடிப்படையில் மாத வாடகைக்கு எடுத்து நடத்த எவரும் முன்வரவில்லை. தற்போது இந்த கடை கடந்த 28 மாதங்களாக பூட்டப்பட்டு நகராட்சி வசமே இருந்து வருகிறது. இதனால் நகராட்சிக்கு தொடர்ந்து நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது. தற்போது திரு.R.காளிதாஸ் என்பவர் மாத வாடகையாக ரூ.12,100/-க்கு உயர்வான ஏலக்கேள்வி கேட்டுள்ளார். இக்கடைக்கு அருகில் உள்ள கடை எண்.01க்கு உரிய வாடகை ரூ.11,500/- ஐ காட்டிலும் இக்கடைக்கான மாத வாடகை ரூ.600 /- வரை அதிகமாக கோரப்பட்டுள்ளது.<br>எனவே, இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையிலும், தொடர் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும், மேற்கண்ட கடைக்கு இரண்டு ஏலக்கேள்விகள் கோரியதில் திரு.R.காளிதாஸ் என்பவரின் உயர்வான ஏலக்கேள்வியான மாத வாடகை மதிப்பு ரூ.12,100/-ஐ ஏற்றுக்கொள்ளலாம். இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தினை கருத்தில் கொண்டு குட்டைகரை கடை எண் 2-ஐ திரு.R.காளிதாஸ் என்பவருக்கு குத்தகை நிபந்தணைகளுக்குட்பட்டு மாத வாடகை ரூ.12,100/-க்கு (ரூபாய் பண்ணிரண்டு ஆயிரத்து நூறு மட்டும்) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 10039/2017 /அ2)</td><td></td></tr>
<tr><td>28</td><td>1647</td><td>இந்நகராட்சிக்குச் சொந்தமான மத்திய பேருந்து நிலையம் வெளிப்புறம் கடை எண் 22-ஐ, குத்தகைக்கு விட்டு உரிமம் வழங்கும் பொருட்டு, 13.08.2021ம் நாளில் திறந்த மறு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொது மறு ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்காணும் விபரத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரியவரின் பெயர் /விலாசம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக் கேள்வித் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி.S.ஜெயலட்சுமி<br>SBI காலணி,உடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.19,700/-</td></tr>
<tr><td>2.</td><td>திரு.S.கார்த்திகேயன்<br>11/A கரிகாலன் வீ தி<br>உடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.19,500/-</td></tr>
</table>
மேற்கண்ட கடைக்கான முந்தைய குத்தகைதாரர்கள் திரு.சிவக்குமார் என்பவர்க்கு கடை 22க்கு கேட்பு எண்.157/1551க்கான மாத வாடகை மதிப்பு ரூ.23,100/-ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த கடைக்கான வாடகை மிக அதிகமாக இருப்பதாக தெரிவித்து கடையை 30.04.2021ம் நாளில் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இதன் அருகில் உள்ள கடை எண்.21க்கு திரு.பிரதீப் என்பவர் பெயரில் கேட்பு எண்.157/1550க்கு மாத வாடகை ரூ.16,000/- உள்ளது.<br>தற்போது இந்த கடை கடந்த 4 மாதங்களாக பூட்டப்பட்டு நகராட்சி வசமே இருந்து வருகிறது. இதனால் நகராட்சிக்கு தொடர்ந்து நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது. தற்போது திருமதி.S.ஜெயலட்சுமி என்பவர் மாத வாடகையாக ரூ.19,700/-க்கு உயர்வான ஏலக்கேள்வி கேட்டுள்ளார். இக்கடைக்கு அருகில் உள்ள கடை எண்.21க்கு மாத வாடகை ரூ.16,000/-ஐ காட்டிலும் இக்கடைக்கான மாத வாடகை ரூ.3,700/- வரை அதிகமாக கோரப்பட்டுள்ளது<br>எனவே, இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையிலும், தொடர் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும், மேற்கண்ட கடைக்கு இரண்டு</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>ஏலக்கேள்விகள் கோரியதில் திருமதி.S.ஜெயலட்சுமி என்பவரின் உயர்வான ஏலக்கேள்வியான மாத வாடகை மதிப்பு ரூ.19,700/-ஐ ஏற்றுக்கொள்ளலாம். இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தினை கருத்தில் கொண்டு மத்திய பேருந்து நிலையம் வெளிப்புறக்கடை எண் 22 ஐ திருமதி.S.ஜெயலட்சுமி என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மாத வாடகை ரூ.19,700/-க்கு (ரூபாய் பத்தொன்பது ஆயிரத்து எழுநூறு மட்டும்) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 10039/2017 /அ2)</td><td></td></tr>
<tr><td>29</td><td>1648</td><td>இந்நகராட்சிக்குச் சொந்தமான மத்திய பேருந்து நிலையம் காலியிடக் கடை எண் 11, 12-க்கு, குத்தகைக்கு விட்டு உரிமம் வழங்கும் பொருட்டு, 13.08.2021ம் நாளில் திறந்த மறு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொது மறு ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்காணும் விபரத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரியவரின் பெயர் /விலாசம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக் கேள்வித் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு.A.M..சிக்காந்தர் பாஷா<br>த/பெ.S.M.அப்பாஸ்,<br>67/12 UKC நகர்,உடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.11,800/-</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.A.சுபைதாபேகம்<br>50/62 செல்லமுத்து<br>வீ தி உடுமலைப்பேட்டை</td><td>இல்லை</td><td>ரூ.10,000/-</td></tr>
</table>
மேற்கண்ட கடைக்கான முந்தைய குத்தகைதாரர்கள் திருமதி.உமாதேவி மற்றும் திரு.ராகுல்தேவ் என்பவர்க்கு மாத வாடகை மதிப்பு ரூ.40,800/-ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த வாடகை மதிப்பு மிக அதிகமாக இருப்பதாகவும் இந்த கடையின் சாலையோரத்தில் அதாவது முன்புரத்தில் மேம்பாலத்திற்கான நடைமேடை அமைக்கப்பட்டதால் கடையின் முகப்பு மறைக்கப்பட்டுவிட்டது எனவும், இதனால் இவ்விடத்தில் கடையை நடத்த இயலாது என தெரிவித்து குத்தகைதாரர்களால் கடந்த 28.11.2019ம் நாளில் மேற்கண்ட கடையை காலிசெய்துவிட்டு நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிட்டது.<br>
மேலும், இக்கடைகளுக்கு கடந்த 24.12.2020, 29.01.2021, 13.08.2021 ஆகிய நாட்களின் குத்தகைக்கு விடுவதற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இக்கடையை குத்தகை அடிப்படையில் மாத வாடகைக்கு எடுத்து நடத்த எவரும் முன்வரவில்லை. தற்போது இக்காலிக்கடை கடந்த 22 மாதங்களாக நகராட்சி வசமே காலியாக இருந்து வருகிறது. இதனால் நகராட்சிக்கு தொடர்ந்து நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது. தற்போது திரு.A.M..சிக்காந்தர் பாஷா என்பவர் மாத வாடகையாக ரூ.11,800/-க்கு உயர்வான ஏலக்கேள்வி கேட்டுள்ளார்.<br>
எனவே, இந்நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையிலும், தொடர் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும், மேற்கண்ட கடைக்கு இரண்டு ஏலக்கேள்விகள் கோரியதில் திரு.A.M..சிக்காந்தர் பாஷா என்பவரின் உயர்வான ஏலக்கேள்வியான மாத வாடகை மதிப்பு ரூ.11,800/-ஐ ஏற்றுக்கொள்ளலாம். இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தினை கருத்தில் கொண்டு மத்திய பேருந்து நிலையம் காலியிடக்கடை எண் 11, 12 ஐ திரு.A.M..சிக்காந்தர் பாஷா என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மாத வாடகை ரூ.11,800/-க்கு (ரூபாய் பதினொரு ஆயிரத்து எந்நூறு மட்டும்) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 10039/2017 /அ2)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>30</td><td>1649</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய டவுன் சர்வே வார்டு எண்.B, பிளாக் எண். 3, நகரளவு எண். 10/4A, 10/4A7, புதிய டவுன் சர்வே வார்டு எண்.G, பிளாக் எண்.15, நகரளவு எண். 10/2A, 10/2C3, 10/2C1- திருப்பூர் ரோடு மொத்த பரப்பளவு 1.05 ஏக்கர் நிலப்பரப்பில் அனுமதியற்ற மனைகளாக</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>பிரிக்கப்பட்டு கோவை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் ந.க.எண். 7200/2018/கோம3, நாள். 24.07.2018 வரிசை எண். புல Single Plot Frame work இணைப்பு தயார் செய்து SPFW எண் 2679 என எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தில் கிராம வளர்ச்சி சாலையினை இணைக்கும் _ன்று சாலைகளை தான ஆவணம் மூலம் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் மூன்று சாலைகளும் தான ஆவண எண். 3642./2021, நாள். 25.03.2021ல் இந்நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்கண்ட சாலையினை இந்நகராட்சியின் பராமரிப்பில் எற்றுக் கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 789/2021/எப்1)</td><td></td></tr>
<tr><td>31</td><td>1650</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி மத்திய பேருந்து நிலையம் திருப்பூர் பேருந்துகள் நிற்கும் இடத்தில் உள்ள மேற்கூரையில் சேதமடைந்த சிமெண்ட் பூச்சுகளை சரிசெய்யும் பணியை ரூ.1,00,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 26.02.2021-ல் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><td>1</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.02% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 4.01% குறைவு</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.RSM & Co, Udumalpet என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>ந.க.எண் 2381/2020/இ1</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>32</td><td>1651</td><td>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 10039/2017/அ2 நாள் 31.08.2018ன்படி, இந்நகராட்சி பழனி பாதை மத்திய பேருந்து நிலைய வெளிப்புறக் காலியிட கடை எண்: 11 ஐ 2018-19 முதல் 2020-21 முடிய மூன்றாண்டுகளுக்கு மாத வாடகை ரூ.18,700/-வீ தம் குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருமதி.ஆர்.உமாதேவி அவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கி உத்தரவிடப்பட்டது.<br>மேற்கண்ட குத்தகைதாரருக்கு நகராட்சி காலியிட கடையை கடந்த 01.09.2018ம் நாளில் ஒப்படைப்பு செய்து அவரும் அவற்றைப் பெற்றுக்கொண்டு கடையை நடத்தி வந்துள்ளார். நெடுஞ்சாலைத்துறை மூலம் மேம்பாலம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதால் நகராட்சி காலியிடக் கடை எண்: 11க்கு முன்பாக மேம்பாலத்தின் நடைமேடை அமைக்க வேண்டியது ஏற்பட்டு விட்டது. குத்தகைதாரரின் காலியிட கடை முன்பாக நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பெரியபள்ளம் தோண்டப்பட்டு விட்டது. இதனால் வாடிக்கையாளர்கள் இக்கடைக்கு வந்து செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இதைத்தொடர்ந்து இக்கடையின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டதால் கடை பூட்டப்பட்டே இருந்ததால், குத்தகைதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவரால் தனது 28.11.2019ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் நகராட்சி காலியிடக்கடை எண் :11ஐ நகராட்சி வசமே திரும்ப ஒப்படைப்பு செய்துள்ளார். மேலும் குத்தகைதாரரின் காலியிடக்கடை எண் :11க்கு கடந்த 2019-2020 முடிய அதாவது 31.03.2020 வரை கடை வாடகையை நிலுவை ஏதுமின்றி செலுத்தியுள்ளார்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எனவே, குத்தகைதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவரால் நகராட்சி காலியிட கடை எண்:11ஐ நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால் இக்கடைக்கு செலுத்திய குத்தகை வைப்புத்தொகை ரூ.2,00,000/-ம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.2,64,792/-ம் சேர்த்து மொத்த குத்தகை வைப்புத்தொகை ரூ.4,64,792/-ஐ தனக்கு திரும்ப வழங்குவதற்காக கடந்த 28.11.2019, 07.02.2020, 06.03.2020, 23.05.2020, 03.09.2020 மற்றும் 26.11.2020 நாட்களில் பதிவு தபால்கள் மூலம் இந்நகராட்சிக்கு அனுப்பி வைத்து, வைப்புத்தொகையை திரும்ப வழங்கக் கோரியுள்ளார். குத்தகைதாரரின் கோரிக்கையை உரிய காலத்திற்குள் பரிசீலித்து அன்னாரின் வைப்புத்தொகை திரும்ப வழங்குவது குறித்து நகராட்சியால் முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.<br>நகராட்சி கடையை குத்தகைதாரர் திரும்ப ஒப்படைக்கப்பட்ட நிலையில் அன்னார் செலுத்திய குத்தகை வைப்புநிதியை திரும்ப வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதை ஏற்க இயலாத குத்தகைதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவரால் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண் 297229 நாள் 21.03.2021ன்படி முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு செய்து குத்தகை வைப்புத்தொகையை திரும்ப வழங்கக் கோரியுள்ளார்.<br>மேற்கண்ட விபரத்திற்கு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு மீது 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுத்து முடிக்குமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கொரோனா பெருந்தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், நகராட்சியின் வசூல் பணியும் பாதிக்கப்பட்டது. மேலும் நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் மனுதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவருக்கு குத்தகை வைப்புத்தொகையை திரும்ப வழங்குவதற்கு வாய்ப்பு எழவில்லை.<br>இக்காலதாமதத்தினை பொருட்படுத்தாத மனுதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவர் நகராட்சி ஆணையாளரால் குத்தகை வைப்புத்தொகை திரும்ப வழங்கவில்லையென உடுமலைப்பேட்டை காவல்நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார். இப்புகாரைத் தொடர்ந்து காவல் ஆய்வாளரால் 18.08.2021ம் நாளில் குற்றப்பிரிவு 160 மற்றும் 91 Crpc ன்படி நகராட்சி ஆணையருக்கு விசாரணை அழைப்பாணை கொடுத்து காவல் நிலையத்தில் விசாரணையும் நடைபெற்றது. இவ்விசாரணையில் ஆணையாளருக்காக கலந்து கொண்ட மேலாளரின் 18.08.2021ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவருக்கு 30 தினங்களுக்குள் அன்னாருக்கு சேரவேண்டிய குத்தகை வைப்புத்தொகையை திரும்ப வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக எழுத்து மூலம் பதில் அறிக்கை காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.<br>எனவே, மனுதாரர் திருமதி.ஆர்.உமாதேவி என்பவருக்கு வரும் 18.09.2021ம் நாளுக்குள் அன்னாருக்கு சேரவேண்டிய குத்தகை வைப்புத்தொகையை காசோலை மூலம் திரும்ப வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மத்திய பேருந்து நிலையம் வெளிப்புறக் காலியிடக்கடை எண் 11ஐ குத்தகைதாரரால் கடந்த 28.11.2019ல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்ட நிலையில் மனுதாரரும் இக்கடைக்கு கடந்த 31.03.2020 முடிய வாடகையை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ள நிலையில் இக்கடை எவ்வித பயன்பாடும் இன்றி நகராட்சி வசமே இருந்த போதிலும் இக்கடைக்கு கடந்த 01.04.2020 முதல் 31.04.2021 முடிய 13 மாதங்களுக்கு ரூ.4,48,800/-க்கு தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டு விட்டது. குத்தகைதாரரால் | |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்பாடு இல்லாத இக்கடைக்கு தவறுதலாக கேட்பு எழுப்பியதை நிர்வாக ரீதியாக கேட்பு நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.<br>மேற்கண்ட விபரத்திற்கு நிர்வாக நலன் கருதி காலியிடக்கடை எண் 11க்கு திருமதி.ஆர்.உமாதேவி பெயரில் தவறாக எழுப்பப்பட்ட குத்தகை கேட்பு ரூ.4,48,000/-ஐ குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்வதற்கும், மனுதாரர் திருமதி.ஆர்.உமாதேவி பெயரில் குத்தகை வைப்பு நிதிக்கணக்கில் உள்ள குத்தகை வைப்புத்தொகை ரூ.4,64,792/-ஐ அன்னாருக்கு காசோலை மூலம் திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2991/2021/அ2) | |
| **33** | 1652 | இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 10039/2017/அ2 நாள் 31.08.2018ன்படி, இந்நகராட்சி பழனி பாதை மத்திய பேருந்து நிலைய வெளிப்புறக் காலியிட கடை எண்: 12 ஐ 2018-19 முதல் 2020-21 முடிய மூன்றாண்டுகளுக்கு மாத வாடகை ரூ.22,100/-வீதம் குத்தகை நிபந்தணைகளுக்கு உட்பட்டு திரு.ஆர்.ராகுல்தேவ் அவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கி உத்தரவிடப்பட்டது.<br>மேற்கண்ட குத்தகைதாரருக்கு நகராட்சி காலியிட கடையை கடந்த 01.09.2018ம் நாளில் ஒப்படைப்பு செய்து அவரும் அவற்றைப் பெற்றுக்கொண்டு கடையை நடத்தி வந்துள்ளார். நெடுஞ்சாலைத்துறை மூலம் மேம்பாலம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதால் நகராட்சி காலியிடக் கடை எண்: 12க்கு முன்பாக மேம்பாலத்தின் நடைமேடை அமைக்க வேண்டியது ஏற்பட்டு விட்டது. குத்தகைதாரரின் காலியிட கடை முன்பாக நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பெரியபள்ளம் தோண்டப்பட்டு விட்டது. இதனால் வாடிக்கையாளர்கள் இக்கடைக்கு வந்து செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இதைத்தொடர்ந்து இக்கடையின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டதால் கடை பூட்டப்பட்டே இருந்ததால், குத்தகைதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவரால் தனது 28.11.2019ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் நகராட்சி காலியிடக்கடை எண்:12ஐ நகராட்சி வசமே திரும்ப ஒப்படைப்பு செய்துள்ளார். மேலும் குத்தகைதாரரின் காலியிட கடை எண் :12க்கு கடந்த 2019-2020 முடிய அதாவது 30.09.2021 வரை கடை வாடகையை நிலுவை ஏதுமின்றி செலுத்தியுள்ளார்.<br>எனவே, குத்தகைதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவரால் நகராட்சி காலியிட கடை எண்:12ஐ நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால் இக்கடைக்கு செலுத்திய குத்தகை வைப்புத்தொகை ரூ.2,00,000/-ம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1,91,755/-ம் சேர்த்து மொத்த குத்தகை வைப்புத்தொகை ரூ.3,91,755/-ஐ தனக்கு திரும்ப வழங்குவதற்காக கடந்த 28.11.2019, 07.02.2020, 06.03.2020, 23.05.2020, 03.09.2020 மற்றும் 26.11.2020 நாட்களில் பதிவு தபால்கள் மூலம் இந்நகராட்சிக்கு அனுப்பி வைத்து, வைப்புத்தொகையை திரும்ப வழங்கக் கோரியுள்ளார். குத்தகைதாரரின் கோரிக்கையை உரிய காலத்திற்குள் பரிசீலித்து அன்னாரின் வைப்புத்தொகை திரும்ப வழங்குவது குறித்து நகராட்சியால் முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.<br>நகராட்சி கடையை குத்தகைதாரர் திரும்ப ஒப்படைக்கப்பட்ட நிலையில் அன்னார் செலுத்திய குத்தகை வைப்புநிதியை திரும்ப வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதை ஏற்க இயலாத குத்தகைதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவரால் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண் 297229 நாள் 21.03.2021ன்படி முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு செய்து குத்தகை வைப்புத்தொகையை திரும்ப வழங்கக் கோரியுள்ளார். | அனுமதிக்கப் பட்டது |

மேற்கண்ட விபரத்திற்கு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு மீது 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுத்து முடிக்குமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கொரோனா பெருந்தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், நகராட்சியின் வசூல் பணியும் பாதிக்கப்பட்டது. மேலும் நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் மனுதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவருக்கு குத்தகை வைப்புத்தொகையை திரும்ப வழங்குவதற்கு வாய்ப்பு எழவில்லை.

இக்காலதாமதத்தினை பொருட்படுத்தாத மனுதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவர் நகராட்சி ஆணையாளரால் குத்தகை வைப்புத்தொகை திரும்ப வழங்கவில்லையென உடுமலைப்பேட்டை காவல்நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார். இப்புகாரைத் தொடர்ந்து காவல் ஆய்வாளரால் 18.08.2021ம் நாளில் குற்றப்பிரிவு 160 மற்றும் 91 Crpc ன்படி நகராட்சி ஆணையருக்கு விசாரணை அழைப்பாணை கொடுத்து காவல் நிலையத்தில் விசாரணையும் நடைபெற்றது. இவ்விசாரணையில் ஆணையாளருக்காக கலந்து கொண்ட மேலாளரின் 18.08.2021ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவருக்கு 30 தினங்களுக்குள் அன்னாருக்கு சேரவேண்டிய குத்தகை வைப்புத்தொகையை திரும்ப வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக எழுத்து மூலம் பதில் அறிக்கை காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவருக்கு வரும் 18.09.2021ம் நாளுக்குள் அன்னாருக்கு சேரவேண்டிய குத்தகை வைப்புத்தொகையை காசோலை மூலம் திரும்ப வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மத்திய பேருந்து நிலையம் வெளிப்புறக் காலியிடக்கடை எண் 12ஐ குத்தகைதாரரால் கடந்த 28.11.2019ல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்ட நிலையில் மனுதாரரும் இக்கடைக்கு கடந்த 30.09.2021 முடிய வாடகையை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் என்பவர் நகராட்சியின் காலிக்கடை எண்: 12ஐ கடந்த நவம்பர் 2019ல் ஒப்படைக்கப்பட்ட நிலையில், கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் 2019 ஆகிய இரண்டு மாதத்திற்கு ரூ.67,626/-ஐ நிலுவை வைத்துள்ளார். மேற்கண்ட வாடகை நிலுவையை அன்னாரின் வைப்புநிதிக் கணக்கிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். இந்நிலையில் இக்கடை எவ்வித பயன்பாடும் இன்றி நகராட்சி வசமே இருந்த போதிலும் இக்கடைக்கு கடந்த 01.12.2019 முதல் 31.03.2021 முடிய 16 மாதங்களுக்கு ரூ.3,53,600/-க்கு தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டு விட்டது. குத்தகைதாரரால் பயன்பாடு இல்லாத இக்கடைக்கு தவறுதலாக கேட்பு எழுப்பியதை நிர்வாக ரீதியாக கேட்பு நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேற்கண்ட விபரத்திற்கு நிர்வாக நலன் கருதி காலியிடக்கடை எண் 12க்கு திரு.ஆர்.ராகுல்தேவ் பெயரில் தவறாக எழுப்பப்பட்ட குத்தகை கேட்பு ரூ.3,53,600/-ஐ குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்வதற்கும், அன்னாரின் வாடகை நிலுவை ரூ.67,626/-ஐ வைப்புநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம். மேலும் குத்தகைதாரர் திரு.ஆர்.ராகுல்தேவ் பெயரில் குத்தகை வைப்பு நிதிக்கணக்கில் உள்ள குத்தகை வைப்புத்தொகை ரூ.3,91,755/-ல் நிலுவை ரூ.67,726/- நீங்கலாக எஞ்சிய தொகை ரூ.3,24,129/-ஐ அன்னாருக்கு காசோலை மூலம் திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 2991/2021/அ2)

<table>
<tr>
<td>34</td>
<td>1653</td>
<td>
இந்நகராட்சிக்குச் சொந்தமான மத்திய பேருந்து நிலையத்தில் தட்டுகளில் வைத்து பூ சுற்றி விற்பனை செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கும் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கடந்த 27.08.2021ம் நாளில் வரப்பெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.
<table>
<tr><td>வ. எண்</td><td>ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் பெயர் மற்றும் விலாசம்</td><td>ஓராண்டுக்கான ஏலத்தொகை</td><td>ஓராண்டுக் கான ஒப்பந்தப்புள் ளி தொகை</td></tr>
<tr><td>1</td><td>திருமதி,சசிகலா<br>6/28, பெருமாள் கோவில் சந்து நெல்லுக்கடைவீ தி உடுமலைப்பேட்டை</td><td>ரூ.1,25,000</td><td>இல்லை</td></tr>
<tr><td>2</td><td>திரு, சிதம்பரம்<br>6/28, பெருமாள் கோவில் சந்து நெல்லுக்கடைவீ தி உடுமலைப்பேட்டை.</td><td>ரூ.1,24,000</td><td>இல்லை</td></tr>
</table>
மேற்கண்ட விபரத்திற்கான ஏலத்தில் இருவர் கலந்து கொண்டதில் திருமதி,சசிகலா, என்பவர் ரூ.1,25,000/-க்கு அதிகபட்சமாக ஏலம் கேட்டுள்ளார் இந்த குத்தகை இனத்திற்கு சென்றஆண்டு ஏலத் தொகை ரூ.5,25,829/- ஆகும். இவ்வினத்தின் கடந்த 3 ஆண்டுகளில் சராசரித்தொகை ரூ.5,03,186/- ஆகும். எனவே, திருமதி,சசிகலா, என்பவரின் ஏலக்கேள்வி சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ.4,00,829/- குறைவாக உள்ளதுடன் 3 ஆண்டுகளில் சராசரித்தொகையைக்காட்டிலும் ரூ.3,78,186/- குறைவாக உள்ளது,<br>
மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கடந்த 11.02.2021, 25,02,2021, 22,07,2021 மற்றும் 13,08,2021 ஆகிய நாட்களில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் எவர் ஒருவரும் இவ்வினத்தை குத்தகைக்கு எடுத்து நடத்த முன் வரவில்லை. முந்தைய குத்தகைதாரர் இக்குத்தகை தொகை மிக அதிகமாக உள்ளது என்றும் இவற்றை தொடர்ந்து நடத்த இயலாது என தெரிவித்து கடந்த 26.12.2018ல் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது, மேலும், பூ சுற்று வியாபாரம் சிறுதொழில் என்பதால் பலர் சாலையோரங்களில் வைத்து வியாபாரம் செய்கின்றனர். எனவே, இதனை எவரும் ஏலம் எடுக்க முன் வரவில்லை. கொரோனா பெருந்தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக பொது ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலத்தில் பேருந்து போக்குவரத்து தடை செய்யப்பட்டதால் பேருந்தில் வெளியூர் பயணிகளின் போக்குவரத்து மிக குறைவாக ஏற்பட்டுவிட்டது. இக்குத்தகை இனத்தை எடுத்து நடத்த கடந்த மூன்று ஆண்டுகளாகவே எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. இவ்வினத்தில் கடந்த மூன்று ஆண்டாகவே நகராட்சிக்கு எவ்வித வருவாயும் இல்லை. தற்போது இக்குத்தகை இனத்தில் நகராட்சிக்கு புதிய வருவாயை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.<br>
மேலும் இவ்வினத்தின் வசூலுக்கு நகராட்சி மூலம் தனிநபரை நியமித்து வசூல் பணி மேள்கொள்ளப்பட வேண்டியுள்ளது, எனவே, தற்போது நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும் இவ்வினத்தை குத்தகைக்கு விடும் பட்சத்தில் நகராட்சிக்கு ஆண்டுக்கு ஒரே
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>தவணையாக வருவாய் வருவதை கருத்தில் கொண்டு நிர்வாக நலன் கருதியும் இக்குத்தகை இனத்திற்கு பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவர் ஒருவரும் இவ்வினத்தை குத்தகைக்கு எடுத்து நடத்த முன்வராததால் நிர்வாக நலன் கருதி சென்ற ஆண்டு குத்தகையை பொருட்படுத்தாது புதிய வருவாயை உருவாக்கும் விதத்தில் இவ்வினத்திற்கு கடந்த 27,08,2024ம் நாளில் ஏலம் கோரியதில் திருமதி,சசிகலா, என்பவரின் உயர்ந்தபட்ச ஆண்டுக்குத்தகைக்கான ஏலக் கேள்வி ரூ.1,25,000/-ஐ ஏற்று ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்: 8510 /2017/அ2)</td><td></td></tr>
<tr><td>35</td><td>1654</td><td>இந்நகராட்சிக்குச் சொந்தமான இராஜேந்திரா பாதை, பழனிப்பாதை சந்திப்பில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கும் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கடந்த 27.08.2021ம் நாளில் வரப்பெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் பெயர் மற்றும் விலாசம்</th><th>ஓராண்டுக்கான ஏலத்தொகை</th><th>ஓராண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திருமதி. K.உமாபதி,<br>24 ஏ,காந்தி சந்து,2,கல்பனா ரோடு உடுமலைப்பேட்டை.</td><td>ரூ.3,40,000</td><td>இல்லை</td></tr>
<tr><td>2</td><td>திரு.சிவராஜ்,<br>564, பழனிரோடு,<br>வெஞ்சமடை, எஸ்,வி,மில்,<br>உடுமலைப்பேட்டை</td><td>ரூ.3,35,000</td><td>இல்லை</td></tr>
</table>
மேற்கண்ட விபரத்திற்கான ஏலத்தில் இருவர் கலந்து கொண்டதில் திருமதி.K.உமாபதி, என்பவர் ரூ.3,40,000/-க்கு அதிகபட்சமாக ஏலம் கேட்டுள்ளார் இந்த குத்தகை இனத்திற்கு சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ.6,74,730/- ஆகும். இவ்வினத்தின் 3 ஆண்டுகளில் சராசரித்தொகை ரூ.6,43,110/- ஆகும். எனவே, திருமதி.K.உமாபதி, என்பவரின் ஏலக்கேள்வி சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ.3,34,730/- குறைவாக உள்ளதுடன் 3 ஆண்டுகளில் சராசரித்தொகையைக்காட்டிலும் ரூ.3,03,110/- குறைவாக உள்ளது, மேற்கண்ட குத்தகை இனத்திற்கு கடந்த 11,02,2021, 25,02,2021, 22,07,2021 மற்றும் 13,08,2021 ஆகிய நாட்களில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் எவர் ஒருவரும் இவ்வினத்தை குத்தகைக்கு எடுத்து நடத்த முன் வரவில்லை, மேலும் இக்கட்டணக் கழிப்பறைக்கு இந்நகராட்சியின் பணியாளர் ஒருவரை பொறுப்பாக்கி துறை மூலம் வசூல் பணி மேற்கொண்ட வகையில் பணியாளருக்கான சம்பளச் செலவினம் ஆண்டுக்கு இவ்வினத்திற்கு துறைமூலமாக வசூல் செய்யப்பட்டதில் சராசரியாக ஆண்டுக்கு ரூ.3,00,000/- வரை நகராட்சி செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது, இத்துடன் ரூ.2,64,000/- மட்டுமே நகராட்சி வருவாயாக உள்ளது,<br>
மேலும் இவ்வினத்தின் வசூலுக்கு நகராட்சி மூலம் தனிநபரை நியமித்து வசூல் பணி மேள்கொள்ளப்பட வேண்டியுள்ளது, எனவே, தற்போது</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும் இவ்வினத்தை குத்தகைக்கு விடும் பட்சத்தில் நகராட்சிக்கு ஆண்டுக்கு ஒரே தவணையாக வருவாய் வருவதை கருத்தில் கொண்டும் இக்குத்தகை இனத்திற்கு பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவர் ஒருவரும் இவ்வினத்தை குத்தகைக்கு எடுத்து நடத்த முன்வரவில்லை.<br>எனவே, நிர்வாக நலன் கருதி சென்ற ஆண்டு குத்தகையை காட்டிலும் ரூ.3,34,730/- குறைவாக இருந்தாலும் துறை மூலமான உத்தேச ஆண்டு வருமானம் ரூ.2,64,000/-ஐ காட்டிலும் திருமதி.K.உமாபதியின் ஏலக் கேள்வி தொகை ரூ76,000/-க்கு கூடுதலாக இருப்பதால் கடந்த 27,08,2024ம் நாளில் ஏலம் கோரியதில் திருமதி.K.உமாபதி என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி ரூ.3,40,000/-ஐ ஏற்று ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்: 8510 /2017/அ2) | |

(x¥g«) சு.சு.சுரேஷ்குமார்,
M i z ahs®(கூ.பொ) / j å mY t y®

**M i z ahs®**
**cLk i y¥ng£ i l e fuh£Á**